செ.வெ.எண்: 04/ஏப்ரல் நாள்: 02.04.2016

## இராமநாதபுரம் மாவட்டம்

## இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட இராமேஸ்வரம் இரயில் நிலைய வளாகத்தில்

## மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர் ச.நடராஜன் இ.ஆ.ப., அவர்கள் பல்வேறு வாக்காளர் விழிப்புணர்வு பணிகளை மேற்கொண்டார்.

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட இராமேஸ்வரம் ரயில் நிலைய வளாகத்தில் இன்று (02.04.2016) மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர் ச.நடராஜன் இ.ஆப, அவர்கள் பல்வேறு வாக்காளர் விழிப்புணர்வு பணிகளை மேற்கொண்டு பொதுமக்களுக்கு வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட இராமேஸ்வரம் ரயில் நிலைய வளாகத்தில் இன்று மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர் ச.நடராஜன் இ.ஆப, அவர்கள், பயணிகள் மற்றும் பொதுமக்களுக்கு வாக்காளர் விழிப்புணர்வு குறித்த துண்டு பிரசுரங்களை வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தி, சட்டமன்ற பொதுத் தேர்தல் 2016 வாக்குப்பதிவு நாளான மே 16 அன்று தவறாமல் வாக்களித்திட வேண்டுமென பொதுமக்களுக்கு எடுத்துரைத்தார். அதன் பின்பு இரயில் நிலைய வளாகத்திலுள்ள சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் கேன்களில் வாக்காளர் விழிப்புணர்வு குறித்த ஒட்டு வில்லைகளை ஒட்டி விழிப்புணர்வு ஏற்படுத்தினார். அதனைத்தொடர்ந்து இரயில் நிலைய வளாக அருகே உள்ள வாடகை ஆட்டோ வாகனங்களிலும் வாக்காளர் விழிப்புணர்வு குறித்த ஒட்டு வில்லைகளை ஒட்டி விழிப்புணர்வு ஏற்படுத்தினார். இத்தகைய வாக்காளர் விழிப்புணர்வு பணிகளின் மூலம் பொதுமக்களுக்கு வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுவதோடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2016-ல் தவறாமல் வாக்களித்திட வேண்டுமென்ற எண்ணம் ஏற்படும் என மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர் ச.நடராஜன் இ.ஆப, அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது, இராமேஸ்வரம் நகராட்சி ஆணையாளர் திரு.ஜெயராம் ராஜ், வட்டாட்சியர் திருமதி.ரத்தினவள்ளி உள்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.
புகைப்படம்: மின்னஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளது.